முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 19.11.2025 EA.39/2018 in EP.11/2017 in OS.No.244/2011,

எ.ம.சா.2. மனோன்மணி , க/பெ.பாலசுப்பிரமணியம்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு மனுவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) எனது தாயார் வந்துள்ளாரா என்றால் வரவில்லை. நான் பல வருடங்களாக எனது தாயாருடன் தான் இருக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு பாத்தியப்பட்ட சொத்து குறித்து ஏற்கனவே ஒரு வழக்கு நடந்துள்ளது என்றால் சரிதான் அந்த வழக்கு நடந்த காலத்தில் இருந்து என்னென்ன நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கை நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். தாவா சொத்துக்கள் எனது தாயாருக்கு பாத்தியப்பட்டது 1984 ம் ஆண்டு என்றால் சரிதான்.

2) என் தாயாருக்கு மேற்படி சொத்துக்கள் பாத்தியப்பட்ட உடனேயே இந்த மனுதாரர்கள் மற்றும் 7 நபர்கள் மீது வழக்கு போட்டிருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் எனது தாயார் ஒரு துளசியம்மாளுக்கு குடியிருக்க அனுமதி கொடுத்தது பேரின் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான், அந்த வழக்கு எனது தாயாருக்கு விரோதமாக தான் தீர்ப்பானது என்றால் சரிதான். அதன் பேரில் மேல் முறையீடு தாக்கல் செய்து மேல்முறையீடும் தள்ளுபடி செய்யபட்டது என்றால் தடை உத்தரவு மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.மேற்படி தடை உத்தரவு வழக்கு 1987 ம் ஆண்டு முடிவுற்றது என்றால் சரிதான்.

3) தடை உத்தரவு வழக்கு போட்ட போது யார் யார் தாவா சொத்தில் இருந்தார்களோ அவரது வாரிசுகள் இதுநாள் வரை இருந்து வருகிறார்கள்

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

என்றால் இல்லை. 2011 ம் ஆண்டு எனது தாயார் தாக்கல் செய்த வழக்கு இந்தமனுவின் மனுதாரர் ராமராஜ் பேரில் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்குராமராஜ் எனது தாயாரின் அனுமதி பேரில் தாவா சொத்தில் குடியிருந்து வருவதாகவும் வெளியேறும் படி கேட்டும் வெளியேற மறுத்ததால் தான் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு சமயத்தில் இந்த மனுதாரர் ராமராஜ் தான் வழக்கு சொத்தில் இருந்தார் என்றால் சரிதான்.

4) மேற்படி வழக்கு எனது தாயாருக்கு ஒரு தலை பட்சமாக தீர்ப்பானது என்றால் சரிதான். எங்களது சொத்தில் குடியிருந்த மற்ற நபர்களிடம் இருந்து நீதிமன்ற அமீனா சுவாதீனம் எடுத்தார் என்றால் சரிதான். அவர்கள் மனு தாக்கல் செய்து சுவாதீனம் எடுத்தது தவறு என்றும் மேற்படி நபர்களிடமே மீண்டும் சுவாதீனத்தை ஒப்படைக்க வேண்டும் என்று தீர்ப்பாகிவிட்டது என்றால் தவறுதலாக சுவாதீனம் எடுத்ததால் அவ்வாறு தீர்ப்பானது. மேற்படி வழக்கிலும் அதற்கு முந்தைய வழக்கிலும் எனது தாயார் தாக்கல் செய்திருந்த ஆவணங்கள் பற்றி தெரியும் என்றால் தெரியும்.

5) இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பிருந்து ராமராஜ் பெயரில் வீட்டுவரி,மின் இணைப்பு , குடிநீர் வரி ஆகியவை அவரது பெயரில் உள்ளது என்றால் சரிதான். எனது அம்மாவிற்கு தெரியாமல் அவ்வாறு அவர் பெற்றுவிட்டார். அவ்வாறு ராமராஜ் உரிமையில்லாமல் ஆவணங்கள் பெற்றுள்ளதால் உரிமையில்லை என்று எனது தாயார் வழக்கு போட்டாரா என்றால் போட்டார் அந்த வழக்கு தான் இந்த வழக்காகும். ராமராஜின் பிள்ளைகளுக்கு சுமார் 40–45 வயதிருக்கும் என்றால் 40 வயதிற்குள் இருக்கும் தாவா சொத்திற்கு வந்ததற்கு பிறகு தான் அவர்கள் பிறந்தார்கள்.

ஒப்பம்/–(R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

6) தாவா சொத்து உடுமலைபேட்டை சொத்து என்பது தவறு என்றால் உடுமலைபேட்டை சொத்து அல்ல உடுமலைபேட்டையில் நடந்த வழக்கின் சொத்தாகும். 27.05.1984 ல் எனது தாயாருக்கு வந்த சொத்து என்று நான் கூறியுள்ள நிலையில் இந்த மனுதாரர் மற்றும் இதர நபர்கள் மீது எனது தாயார் 1984 லேயே அனுமதியின் பேரில் குடியிருந்தார்கள் என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. இந்த வழக்கில் மனுதாரருக்கு அழைப்பாணை சார்வாகாமல் ஒரு தலை பட்சமாக தீர்ப்பானது என்றால் சரியல்ல. தன்மீது தீர்ப்பானதை ரத்து செய்யாமல் மற்றவர்களும் இருப்பதால் இந்த மனுவை இந்த மனுதாரர் இங்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 1984 ம் ஆண்டிலிருந்து எனதுதாயார் தான் வழக்கு நடத்தி வருகிறார் என்றால் சரிதான். ஒவ்வொரு வாய்தாவிற்கும் வருகிறார் என்றால் சரிதான்.

7) அக்கம் பக்கத்தினர் யாரும் இல்லாததால் எனது தாயாருக்கு உடல்நிலை சரியில்லை என்று பொய்யாக கூறி நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து ராமராஜ் இடம் என்றும் எனது தாயார் தவறுதலாக தீர்ப்பு பெற்று இந்த நிறைவேற்று மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல அதனால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனு அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.